# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

**KALIA BROTHERS (Regd.)**

JULLUNDUR CITY—N. INDIA

✲

## ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

✲

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

**கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)**

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited.

## H. O.: Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752).
Cannanore (Phone 92).
Palghat (Phone 195),
Kozhikode (Phone 984).
Ernakulam (Phone 494)
Ponani (Phone 41),
Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலை:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்ரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்ரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தாத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

A ராகவாரவ், *மானேஜிங டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

கீழ ராஜவீதி, — புதுக்கோட்டை.

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்

குழந்தை வைத்ய நிபுணருமான

ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வநாத சர்மா

அவர்களின்

மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்

விசேஷமாக சிசு நோய்களுக்கும்

ஆயுர்வேத முறைப்படி

சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யநாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வநாத சர்மா
பிரதான வைத்யர்.




# வைத்ய சந்த்ரிகை.

**தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.**

| | | |
|---|---|---|
| தொகுதி 23 | பிலவ – புரட்டாசி, ஐப்பசி. | பகுதி 10 |
| Vol. 23 | OCTOBER 1961 | No. 10 |


**आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।**
**द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥**

## மத்திய ஸர்க்காரின் கொள்கை திருந்தவேண்டும்.


[ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜசாஸ்திரி, திருச்சி.]


இந்தியாவில் இப்பொழுது பலவித வைத்திய முறைகள் இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மத்ய ஸர்க்கார் ஆரோக்கிய இலாகா மூலமாய் உதவியும் ஆதரவும் அளித்துக் கொண்டிருக்கின்றது என்று வெளிக்குச் சொல்லலாமாயினும். எந்த ஒரு வைத்திய முறையை மத்திய ஸர்க்கார் உள்ளந்தரங்கத்துடன் உண்மையில் வளர்க்கின்றது என்று எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஆலோபதிக் வைத்திய முறை ஒன்றுதான் ஸர்க்காரால் சரியானபடி ஸத்தியத்தில் வளர்க்கப் படுகின்றது என்பதும், ஆயுர்வேதத்திற்கு உசிதமான ஆதரவு சிறிதும் கொடுக்கப்படவில்லை யென்பதும் தெளிவாய் தெரிந்த விஷயங்கள்.

இவ்விதம் குறை கூறுவது தவறு. ஆயுர்வேதத்திற்கும் மத்திய ஸர்க்கார் எல்லாவித ஸஹாயமளிக்கவே செய்கின்றது. ஆயுர்வேதாபிவிருத்தி வழிகளை ஆலோசனை செய்து தீர்மானம் தெரிவிக்கப் பல கமிட்டிகளை நியமனம் செய்துள்ளது. அதன்

படிக்கு ஆயுர்வேத ஆராய்ச்சி முதலியதிற்கு யோஜனை சொல்ல Advisery Board என்று தனிஸ்தாபனம் யூனியன் ஆரோக்கிய இலாகாவில் ஏற்படுத்தியுள்ளது. ஜாம்நகரில் வித்வான்களைக் கொண்டு ஆயுர்வேத ஆராய்ச்சிக்கும் பட்டதாரிகளின் மேற்படிப்புக்கும் (Research and Post Graduate Course) ஸௌகர்யமான ஆரோக்கியசாலையும் வித்யாசாலையும் நடத்துகின்றது. ஆராய்ச்சியும் மேற்படிப்பும் நடத்துபவர்களுக்கு விசேஷப் பொருளுதவி செய்யத் திட்டம் கொண்டுள்ளது. புதிய பாடக்கிரமம் தயாரித்துள்ளது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆயுர்வேத வளர்ச்சிக்கு என்று லக்ஷக்கணக்கான பொருள் ஒதுக்குகின்றது-என்றும், இதுபோன்றும் மத்ய ஸர்க்கார் ஆயுர்வேத வளர்ச்சி ஸம்பந்தமாய் செய்யும் கார்யங்களை வரிசையாகத் தொடுந்துச் சொல்லலாம். ஆனால் இவை அவ்வளவும் அரசாட்சியில், அதிலும் ஜனநாயக அரசாட்சி என்ற பெயரில் நடத்தும் அரசாட்சியில், பொது ஜனங்களுடையவும், ஜனப்பிரதிநிதிகள் என்று பலதரங்களில் இருப்பவர்களுடையவும் வாயை மூடவும், கண்ணைத் துடைக்கவும் அனைவரையும் தன் வழிப்படுத்தவும் ஓரளவு உதவலாமே தவிர, ஆயுர்வேதத்தின் உண்மை வளர்ச்சிக்கு, உடன் அல்லது காலாந்தரத்திலாவது உதவியளிக்கக் கூடியவை அல்ல.

மத்திய ஸர்க்காரும் பிராந்திய ஸர்க்கார்களும் பல வருஷங்களாக ஆயுர்வேத வளர்ச்சிக்குச் செய்துவரும் கார்யங்கள் இது வரை பயனளிக்க வில்லை என்பதைப் பிரத்யக்ஷமும் அநுபவமும் நிரூபிக்கின்றன. ஆதலால் வேறு அத்தாட்சி தேட அவசியமில்லை. இவ்வுண்மை, அதாவது ஆயுர்வேதத்திற்குத் தாங்கள் செய்யும் கார்யங்கள் அதை வளர்க்கவில்லை. வளர்க்க உதவாது என்பது, சர்க்காருக்கு நிச்சயமாய் நன்றாய் தெரிந்திருக்கக் கூடியதே. நமது மத்ய சர்க்கார் தனது அலுவல்களின் பலன்களை ஆய்ந்து பார்க்காமலிருக்குமா?

எவ்விதம் ஆயினும் இதில் முக்கிய அம்சங்களை நாமும் எடுத்துக் காட்டுகிறோம்:— (1) ஆயுர்வேத வளர்ச்சி வழிகளைப் பற்றி யோஜனை சொல்ல, அமைக்கப்படும் கமிட்டிகளின் முக்கிய அதிகாரி புருஷர் ஆலோபதிக் டாக்டர், அதிலும் விசேஷமாய் ஆயுர்வேதத்தின் சூழ்நிலையை அறியாதவராகவே பொறுக்கப் படுகிறார். இதைவிட நகைப்புக்குரிய விஷயம் வேறென்ன? ஆயுர்வேதம் பற்றிய படிப்பு அதிகாரம், பொறுப்புகளை ஆயுர்வேத வைத்தியர்களிடம் ஒப்புவிக்கவேண்டும்

என்று ஸர்க்காருக்கு சுயமாகத் தெரியாதா? ஆயுர்வேதிகள் பலர் பலதடவை இதை எடுத்துக்காட்டியும் பயனில்லை. தூங்குகிறவனை எழுப்ப முடியும். விழித்துக் கொண்டிருப்பவனை எழுப்ப முடியாதே! சர்க்காரின் அந்தரங்கம் ஸ்பஷ்டம்.

(2) இந்திய வைத்தியங்கள் என்ற ஒரு புதிய (ஆதாரமற்ற) பொதுப் பெயர் கல்பித்து, அப்பெயரில் ஆயுர்வேதம் யூனானி ஸித்தம் என்ற வெவ்வேறான மூன்று வைத்திய முறைகளைப் பிணைத்து இவைகளின் தராதரங்களைச் சிந்திக்காமல் படிப்பு வைத்தியம் முதலிய ஸகல நிர்வாஹ அதிகாரங்களை ஒரு தலைப்பில் சேர்த்து ஸர்க்கார் நடத்துகின்றது. இந்த விசித்ரமான சேர்க்கை ஆதியிலிருந்தே ஊழலையும் குழப்பத்தையும் இடஞ்சலையும் பிரதிகார்யத்திலும் நிரந்தரமாய் உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றது. மத்யஸர்க்காரின் இந்திய வைத்திய நிர்வாஹிகள் இவைகளைத் தெரிந்தும் நிவிருத்தி செய்யப் பிரவிருத்தி செய்யாததின் காரணம் அரசியல் தந்திரமோ வேறு என்னவோ?

ஆயுர்வேதம், யுனானி, ஸித்தம் என்ற இம்மூன்றும் சாஸ்திர தத்துவ ஸித்தாந்தப் படிக்கு பேதமற்றவையா? பேதமுள்ளவையா? இவைகளில் எந்த முறை எல்லாத்தரங்களிலும் சிறந்தது? என்று நிர்ணயம் செய்தும் உண்மையை வெளிவிட முடியாத படியான ஒரு அரசியல் சூழ்நிலையை மத்ய ஸர்க்கார் நீடித்தே கொண்டுபோய்க் கொண்டிருக்கின்றது. இதனால் பிரதானமாய் அதிகம் பாதிக்கப்படுவது ஆயுர்வேத சாஸ்திரம் தான். அதிலும் தமிழ்நாட்டில் ஆயுர்வேதம் நிராசிரயமாய் விட்டது.

(3) ஆராய்ச்சியும் பட்டதாரிகளுக்கு மேற்படிப்பும் (Research and Post Graduate study) சாஸ்திரத்தின் வளர்ச்சிக்கு எவ்வளவு பரமாவசியமோ, அவ்வளவிற்கு மேல், ஆராய்ச்சிக்கும் மேற்படிப்பிற்கும் உசிதமான கீழ்ப்படிப்பு (under Graduate study) பரம-பரமாவசியம். இந்த மூலாதாரமான கீழ்படிப்புக்கு நல்ல தகுதியான வைத்திய வித்யாசாலை ஒன்றுகூட இன்று இந்தியாவில் எங்கும் ஏற்படவில்லை. இந்த விஷயமும் நிலைமையும் மத்ய ஸர்க்காரின் ஆயுர்வேதத்தின் ஆராய்ச்சி உபதேசக் கமிட்டிகளுக்கு அறியாமல் இருக்கக் கூடியவையில்லையே? அறிந்தும் இக்குறையை அகற்றவில்லை.

ஜாம்நகரில் ஆராய்ச்சி எப்படி நடக்கின்றது என்று பிறகு விளக்குவோம். பட்டதாரி மேற்படிப்பு (Post Graduate course)க்குச் சேர லாயக்கான, கீழ்ப்படிப்பு பூர்த்தியான மாணவர்களே எங்குமில்லை. உள்ளதைச் சொன்னால் அதிகாரிகளுக்கு ஆங்காரம் ஏற்படலாம். ஜாம்நகரில் நடக்கும் மேற்படிப்பு, வெறும் ஆடம்பரப் பகட்டைத் தவிர வேறில்லை.

(4) ஆராய்ச்சிக்கும் மேற்படிப்புக்கும் லாயக்கான பட்டதாரி வித்வான்களை உண்டுபண்ணும் ஒரு கீழ்ப் படிப்பு வித்யா சாலையே இல்லாத இந்தியாவில், ஆராய்ச்சியோ- மேற்படிப்போ நடத்தும் ஸ்தாபனங்களுக்கு ஏராளமாய் பொருளுதவி செய்கிறோம் என்று மத்திய ஸர்க்கார் தாராளமாய் விளம்பரம் செய்கின்றது. இது அஸ்திவாரம் போட மனையே கிடையாது; மூன்றுவது மாடி கட்டுவதற்குப் பொருளுதவி செய்வதாகச் சொல்வது தானே.

(5) Advisery Boardன் புதிய (Syllebus) தயாரிப்பைப் பற்றி பூர்ண விமர்சனம் செய்ய, இங்கு இந்த ஸந்தர்ப்பத்தில் இடம் போதாது. சுருக்கத்தில் இது. அகிலபாரத தேசத்திற்கும் ஆயுர்வேத சாஸ்திரத்தில் ஒரே ரூபமான சிக்ஷாக் கிரமம் கொண்டு வரவேண்டும் என்ற லக்ஷ்யத்தைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அமைக்கப் படவில்லை. மிகுதியான அளவில் சீர் திருத்தம் தேவையுள்ளதாகத் தான் இருக்கின்றது. மற்றவை நமக்கு இங்கு முக்கிய விஷயமல்ல.

(6) எல்லாவற்றிலும் பரம முக்கியமானது அந்தஸ்து (Status) ஸர்க்கார் நியமப்படிக்கு ஆயுர்வேதம் பூரணமாய் பயின்று தேறிய வைத்தியர்கட்கு ஸர்க்கார் அதிகாரத்திலும், உலகத்திலும் என்ன "**அந்தஸ்து**" என்று இதுவரை நமது சர்க்கார் விளக்கவில்லை. அந்தஸ்து தான் மாணவனை ஆகர்ஷிப்பது. தனிப்பட்ட ஆயுர்வேத வித்யாலயங்கள் உண்டாவதும் வளருவதும் அந்தஸ்தை அநுஸரித்துத்தானே, இவ்வுண்மை ஸர்க்காருக்குத் தெரியாததா?

இவ்வளவு விஸ்தாரமாய் தெளிவு செய்த பிறகு நமது மத்ய ஸர்க்கார் ஆயுர்வேத வளர்ச்சிக்காக செய்துள்ள ஏற்பாடுகள் ஆயுர்வேத வளர்ச்சிக்குப் பயனதரக் கூடியவை அல்ல என்பதில் ஸந்தேஹத்திற்கு இடமில்லை. ஸர்க்காருக்கும் இவ்விதம் தெரியாமலிருக்கக் கூடியதில்லை ஆதலால் தான் மத்திய ஸர்க்காருக்கு ஆயுர்வேதத்தை வளர்ப்பதில் ஆலோபதியில் இருப்பது போல, அந்தரங்கத்தில் ஸத்தியமான ஆர்வமில்லை, இந்திய

வைத்தியங்களுக்கும் நாங்கள் எவ்வளவோ உதவியளித்துக் கொண்டிருக்கிறோம், என்று கேழ்ப்பாரை சமனம் செய்வதற்காகத் தான், உண்மையில் பிரயோஜனப் படாத கார்யங்களை வேண்டுமென்று ஸர்க்கார் தெரிந்து செய்கிறது என்றுதான் தீவ்ரமாய் நாம் ஸந்தேஹிப்பதிற்கு இடமாகின்றது.

இதன் மேல் நமது மத்ய ஸர்க்கார் சொல்லும் இறுதி பதில் நாம் நன்கறிந்ததே. அதாவது ஆரோக்கிய இலாகா அதன் கீழ்ப்படிப்பு (Health and under graduate Study) எல்லாம் பிராந்திய சர்க்காரைச் சேர்ந்தவை. கீழ் படிப்பு எல்லாம் அவர்கள் செய்யவேண்டிய கார்யங்கள். ஆராய்ச்சியும், மேல்தரப் படிப்பும் தான் மத்ய சர்க்காரைச் சேர்ந்தவை. இவ்விஷயங்களில் ஆயுர்வேதத்திற்கும் ஆராய்ச்சி மேற்படிப்பு முதலிய கார்யங்களை, மத்ய ஸர்க்கார் நிரம்பச் செய்கின்றது. கீழ்ப் படிப்பு விஷயத்தில் பிராந்திய சர்க்காரின் காரியத்தில் தலையிட மத்ய அரசாங்க விதியில் இடமில்லை— என்பதுதான். மத்திய சர்க்காரின் **இந்த இறுதி பதிலும்**. மத்ய ஸர்க்காருக்கு ஆயுர்வேத வளர்ச்சியில் உண்மையில் இஷ்டமில்லை என்பதிற்கு மாற்று வார்த்தையே.

கல்வி இலாகா முற்றிலும் பிராந்திய விஷயம் தான். ஆயினும் ஹிந்தி பாஷைக்கு மட்டும் மத்ய ஸர்க்கார் எத்தனைவித ஸஹாயம் நேரவே செய்து கொண்டிருக்கிறது? ஏன்? ஆலோபதிக்கு M. B. B. S. Degree course திட்டமும் மாகாணத்திலடங்கியதே. ஆயினும் மத்திய ஸர்க்கார் Allopathyயில் under graduate College ஒன்று பாண்டிச்சேரியில் ஆரம்பித்து நடத்துகின்றது. All India Institute of Medical Sciences என்று புது டில்லியில் பிரும்மாண்டமான காலேஜ் Allopathy under graduatesக்கு ஸமீபகாலத்தில் புதிதாய் ஆரம்பித்து நடத்துகின்றது. வேணுமென்றால் வேரிலும் பழம் பழுக்கும். வேண்டாமென்றால் கிளையில் கூட பூவும் பூக்காது. Allopathyயில் under graduate Colleges புதிது புதிதாய் மத்திய ஸர்க்காரே நேரில் ஆரம்பிக்க அரசாங்க விதி இடம் கொடுக்கின்றது. ஆயுர்வேதத்தில் மாதிரி காலேஜ் ஒன்றாவது ஸ்தாபிக்க மத்திய சர்க்காரின் விதிகளில் இடமில்லையா?

மத்ய சர்க்கார், ஆயுர்வேதத்தின் விஞ்ஞான மகத்துவத்தையும், லோகோபகாரத்தையும் பார்த்து, அதைத் தகுந்த வழியில் வளர்க்காவிடில் விஞ்ஞானத்திற்கும் லோகத்திற்கும் துரோஹம் இழைத்தவர்களாவோம் என்ற சர்க்காரின் கடமை

யையும் பொறுப்பையும் உணர்ந்து. ஆயுர்வேதத்தினுடையவும் தேசத்தினுடையவும் இன்றைய சூழ்நிலையைக் கவனித்து, ஸத்தியமான ஸங்கல்பத்துடன் ஆயுர்வேத வளர்ச்சியில் ஈடுபட்டால், மத்தியிலும் ஓரங்களிலும் அரசாங்க விதிகள் எல்லாம் தாராளமாய் இடங் கொடுக்கும். ஆகவே நமது தேசத்தில் எல்லாப் பிராந்தங்களிலும் ஆயுர்வேதம் வளருவதற்கு மூல ஸ்தானமான மத்ய சர்க்காரின் கொள்கை முதலில் திருந்த வேண்டும்.


# சாரீரச்சொற்கள் அகராதி

—( வைத்யசந்திரிகை வெளியீடு )—

தொகுப்பாசிரியர் :— வைத்ய S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ.

**விலை ரூ. 1—00.**

## மதிப்புரை.

சென்னை வெங்கடரமண ஆயுர்வேதக் கலாசாலை பேராசிரியர்

**ஸ்ரீ. V. S. வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரீ அவர்கள்** எழுதுவது :—

"தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தினல் பிரசுரிக்கப்பட்ட வைத்ய சந்திரிகை வெளியீடுகளில் ஒன்ருகிய "சாரீரச் சொற்கள் அகராதி" ஆயுர்வேதத்திற்கும், தேசீய வைத்யர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் பயன் படக்கூடியவாறு தக்க தருணத்தில் வெளிவந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஆங்கிலப் பெயர்களையும் உரியபடி பிரசுரித்திருப்பதுடன், ஸிராதமனீ க்லோம முதலிய வார்த்தைகளுக்கு, ப்ராசீன ஸம்பிரதாயப்படியும், நவீன ஸம்பிரதாயப் படியும் உள்ள அர்த்தங்களை, உள்ளபடியே சேர்த்திருப்பது மிகவும் பாராட்டத் தக்க அம்சம். இவ்வாறு சிலாக்யமான ஸேவையைத் தொடர்ந்து நன்ருகப் புரிய மண்டலத்திற்கு தன்வந்தரி பகவான் அருள் பாலிப்பாராக."


---

ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத
தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்

ஸெப்டம்பர் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 612 | 1638 |
| பெண்கள் | 655 | |
| சிறுவர் | 371 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்.
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை.

# இஸிநோபிலியாவில் மஞ்சள்.

[வைத்ய சிவசரண த்யாநீ, ஜாம்நகர்.]

[ஸசித்ர ஆயுர்வேத பத்திரிகையில் வெளியான கட்டுரையின் ஸாரம் இங்கு கொடுக்கப்படுகின்றது. வைத்ய த்யாணீ அவர்கள் ஜாம்நகர் ஆயுர்வேத மகாவித்யாலயத்தில் காயசிகித்ஸைப் போராசிரியர் ஆவார். நோயாளிகளிடையே நேரிடைப் பிரயோக அனுபவம் பெற்றுத் தரும் இவ்விளக்கம் பரீக்ஷக வைத்யர்களுக்கு நன்கு பயன் தரும் ஆசிரியர்.]

இஸிநோபில் எனும் வெள்ளை ரத்தாணுக்கள் ரத்தத்தில் தன் அளவைவிட அதிகமாவதையும் அதனால் ஏற்படும் நோய் நிலையையும் ஈஸிநோபிலியா EOSINOPHILIA என்பர். இந்த வெள்ளை அணுக்கள் கீழ்க்கண்ட வியாதி நிலைகளில் வளர்கின்றன.

1. ஆமவிஷம்(அலர்ஜீ) :- ச்வாஸம், ஹே ஜ்வரம், தலைவலி, வாதநரம்பு வலி வீக்கம், சீதபித்தம்.

2. கிருமி ஜீவாணுக்களால் ஏற்படும் சில நோய்கள் :— அன்கிலோஸ்டோமியா*, டிரிகினி, இகினோகோக்கை, பைலேரியா, பில்ஹார்ஜியா, அமீபா, டினியாப்புழு, நாடாப்புழு.

3. சில விசேஷ நோய்கள் :- ஸ்கார்லட் ஜ்வரம், ஹாஜ்கின்ஸ் நோய், அடிஸன்ஸ் நோய், பெரி ஆர்த்ரைடிஸ், நோடோஜா, கோரியா, கொனேரியா, மீஸில்ஸ், மலேரியா, ட்யூபர்குலோஸிஸ்.

4. சில எலும்பு நோய்கள் ,— ஆஸ்டியோபைலடிஸ், ஆஸ்டியோமைலேஸியா, ரிக்கெட்ஸ், ஸர்கோமா, ட்யூமர்.

5. இதைத்தவிர சில ரத்த நோய்களிலும் தோல் நோய்களிலும் இதன் விருத்தி காணப்படுகின்றது.

மண்ணீரலை அகற்றிவிட்டாலும் இந்நிலை ஏற்படும். இவை நோய் நிலையில் ஏற்படுபவை.

---

*குழப்பம் ஏற்படாதிருக்க ஆங்கிலப் பெயர்கள் அப்படியே தரப்படுகின்றன. —(வை. ச. ஆசிரியர்.)

நோயின்றியே சில பாலர்களுக்கும் யுவர்களுக்கும் பரம்பரை குணங்களையொட்டியும் சில யுவதிகளுக்கு ருது காலத்திலும் இவ்வணுக்கள் அளவில் அதிகமாகின்றன.

பொதுவாக நம் நாட்டைப்போன்ற சீதோஷ்ண நிலையுள்ள நாடுகளில் காணப்படுவது Tropical Eosinophilia-வாகும். இதன் அறிகுறிகளாவன: இருமல் - தொடர்ந்த வேகத்துடன்; முக்யமாக இரவில், இரும ஆரம்பித்ததும் தூக்கம் கெடுவது, உடன் படுத்திருக்கமுடியாமல் எழுந்து உட்கார்வது; மார்பில் இளைப்பு, மார்புப்பட்டை எலும்பில் வேதனை, சீழ் போன்றோ, பிசுக்கென்றோ கபம் வெளியாதல்; வியர்வை, முக்யமாக இருமும் போது; உடல் எடைக்குறைவு; அக்னிமந்தம், அருசி, லேசான ஜ்வரம், ஸ்தெதஸ்கோப் பரீக்ஷையில் Sibilant அல்லது Sonorous Rhonchi சப்தம் கேட்கும். சில சமயம் வரண்ட சலசல சப்தமும் கேட்கும்.

**நிதானம்**

சோஷமும் தமகச்வாஸமும் இஸினோபிலியாவும் ஒரே தோற்றத்தை அளிப்பவை. வெள்ளை அணு பரீக்ஷயால் இதை ஸுலபமாகப் பிரித்தறிய முடியலாம். வெள்ளை அணு விகிதத்தில் 3 சத விகிதத்திற்கு மேற்பட்ட (3000 Per cmm.) நிலை வியாதி காரணமாகலாம்.

ஆயுர்வேத ரீதியில் ச்வாஸநோயின் ஒரு பிரிவு ஆகும். ஆயுர்வேத முறைப்படியுள்ள ச்வாஸ சிகித்ஸையால் இதுவும் குணமாகின்றது. நிதான சிகித்ஸைகளில் பேதகலிங்கங்களைக் கொண்டு விசேஷ ஞானம் வைத்யனுக்கு சுலபமாக ஏற்படும்.

வெள்ளைப் பாஷாணம் சேர்ந்த ச்வாஸஹர மருந்துகள் இதில் நல்ல பலன் தருகின்றன. ஆயுர்வேதத்திலும் நவீன முறையிலும் இது ஸமானமே.

**மஞ்சளின் உபயோகம்:—** தனித்து ஒரு மருந்துச் சரக்கைப் பரீக்ஷிப்பதென்ற முறையில் மஞ்சள் 60 நோயாளிகளிடம் பரீக்ஷிக்கப்பட்டது. ஈஸினோபிலியா என நவீன பரீக்ஷைகளிலும் ச்வாஸமென ஆயுர்வேத முறைப்படியும் நிர்ணயித்தபின் சிகித்ஸை அளிக்கப்பட்டது. 60 நோயாளிகளில் 25 நோயாளிகளில் உள்துறை ஆஸ்பத்திரியிலும் மீதி பேர் வெளித்துறை ஆஸ்பத்திரிகளிலும் சிகித்ஸை யளிக்கப்பட்டனர். சிற்சில சமயங்களில் புஷ்கர மூலமும் சிருங்கமும் உபயோகிக்கப்பட்டதைத் தவிர முழுவதும் மஞ்சள் தான் சிகித்ஸையில் உபயோகிக்கப்பட்டது.

***மஞ்சளின் அளவு*** :— மிகக் குறைந்த அளவில் கொடுக்க குணம் தெரியவில்லை. 48—60 யவ அளவு ஜலத்தில் தினம் 2—3 வேளை கொடுத்ததில்— சாப்பிடுவதில் சில நோயாளிகள் கஷ்டப்பட்டனர். சிலருக்கு அருசி ஏற்பட்டது. ஆனால் குணம் நன்கு ஏற்பட்டது. ஸுகுமாரசரீரிகளுக்கு லேஹ்ய பாகத் தில் இதைத் தயார் செய்து பார்க்கவேண்டும் தேவதாரு ஒரு ஆமவிஷஹாரியான (anti allergic) ஔஷதமாக பரீக்ஷைகளில் தேர்கின்றது. தேவதாருவையும், மஞ்சளையும் சேர்த்து லேஹமாகத் தயாரிப்பது நல்லதே. மஞ்சள் கொடுத்த நோயா ளிகளுக்கு 30லிருந்து 80 சத விகிதம் ஈஸிநோபில் ஆரம்பத்தி லிருந்து பிறகு சிகித்ஸை ஆரம்பித்து 2-முதல் 8 வாரகாலத்திற் குள் சுத்தமாக ஸ்வஸ்த நிலைக்கு வந்துவிட்டது.

***சில அனுபவங்கள்*** :— ஸ்தெதஸ்கோப் வைத்துப் பார்க்கும் போதே ஹிருதயத் துவனியை விட புப்புஸத்துவனி கேட்டால் பெரும்பாலாக ஈஸினோபிலியாவாகத்தானிருக்கிறது. சிகித்ஸை ஆரம்பித்ததும் இருந்ததைவிட இரண்டாவது வாரத்தில் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை அதிகமாகி, மூன்றாவது-வாரத்தில் திடீரென மிகவும் குறைவதும் பிறகு தோடர்ந்து குறைந்து வருவதும் காணப்படுகின்றது. 2-வது வாரத்தில் இருமலும் கபாமும் அதிகமாகிறது. எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு சீக்கிரம் குணமாவதும் காணப்படுகிறது.

---

<u>**செய்திகள் :**</u>

## ஆயுர்வேத மாணவர்கள் ஸ்டிரைக் :

சென்ற ஜூலையில் ஹைதராபாத் ஆயுர்வேத யூனானி கலாசாலை மாணவர்கள் ஆந்திர சர்க்காரிடம் சில கோரிக்கைகளை ஸமர்ப்பித் தனர். அவைகளில் முக்கியமானவை— அலோபதி வைத்தியத்தில் பயிற்சி, அலோபதி திரவ்யகுண சாஸ்திர பாடம், காந்தி மெடிகல் கலாசாலையில் நவீன வைத்ய முறை அனுபவப் பயிற்சி, ஆயுர்வேத யூனானி மாணவர்கள் அலோபதி ஆஸ்பத்திரிகளில் 6 மாத காலத் திற்கு ஹவுஸ் ஸர்ஜனாக வேலை செய்ய வசதி, நவீன வைத்ய முறை களில் தேர்ச்சி பெற்றதற்கான தனி டிப்ளமா, டிரக்ஸ் ஆக்ட் நியமங் களை அகற்றி அவர்களுக்கு அலோபதி வைத்ய முறையில் தொழில் நடத்த அனுமதி ஆகியவை.

சர்க்கார் இதற்கு இணங்க சில சலுகைகள் அளித்துள்ளார்கள். நவீன வைத்யமுறைப் பாடங்களை ஆயுர்வேத யூனானிக் கல்லூரி

யிலேயே போதித்தும் ஸுல்தான் பஜார் ஆஸ்பத்திரியில் பயிற்சி அளித்தும் பிறகு ஸுல்தான்பஜார் ஆஸ்பத்திரி வசதி போதாதெனக் கண்டு வேறு இரு ஆஸ்பத்திரிகளில் பயிற்சி அளித்தும் வருகிறது. அந்தப் பயிற்சிக்கான அத்தாக்ஷியையும் தரத் தீர்மானித்துள்ளது. மேலும் நவீன வைத்ய முறைக்கான பாடநேரத்தை அதிகரிக்க யோசித்து வருகிறது. ஆனால் ஹவுஸ் ஸர்ஜனாக பணி செய்யவோ, அலோபதி வைத்யமுறையை தொழில் முறையில் பழகவோ அனுமதிக்க மறுத்து, அவர்கள் ஆயுர்வேத வைத்யர்களாகவோ யூனானி வைத்யர்களாகவோ தான் தொழில் புரிய அனுமதிக்க முடியும் என தெரிவித்துள்ளது.

சர்க்காரை மேலும் வற்புறுத்தும் வகையில் மாணவர்கள் ஸெப்டம்பர் பரீக்ஷைக்கு உட்காராது ஸ்டிரைக் செய்வதைக் கண்டித்து ஸ்டிரைக் நீடிக்குமானால் கலாசாலையே மூடப்பட்டு விடும் என அரசாங்கம் எச்சரித்துள்ளது.

29—9—61 வந்துள்ள ஆந்திரசர்க்கார் அறிக்கையில் சென்னை ராஜ்யத்திலுள்ள G. C. I. M, L. I. M டாக்டர்களுக்குள்ளது போல, இந்திய மெடிகல் கவுன்ஸில் ஆக்டிற்கும் டிரக்ஸ் ஆக்டிற்கும் ஏனைய கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு நவீன வைத்ய முறை மருந்துகள் உபயோகிப்பதற்கோ சீட்டு எழுதிக் கொடுப்பதற்கோ அனுமதி மறுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளது.

* * *

## ஆயுர்வேத குஷ்ட ஆஸ்பத்திரி :

பங்களூரில் கெங்கேரிக்குப் பக்கத்தில் 8 ஏகரா நிலத்தில் பங்களூர் மைஸூர் ரோட்டில் குஷ்ட நிவாரண ஆஸ்பத்திரி ஆரம்பிக்கப் படவிருக்கின்றது. காந்தி ஞாபகார்த்த குஷ்ட நிவாரண ஸ்தாபனம் முதல் இரண்டாண்டுகளுக்கு பண உதவி செய்யும். அகிலபாரத ஆயுர்வேத மகாஸம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், ஜயசாமராஜேந்திர ஆயுர்வேத ஆஸ்பத்திரியின் முன்னாள் டைரெக்டருமான பண்டிட் பார்த்தநாராயண அவர்கள் இதனை நிர்வஹிப்பார். வைத்ய ஸ்ரீ ரகோத்தமாசார்ய அவர்கள் இதன் தலைமை வைத்யராக இருப்பார்.

* * *

## சென்னை ஆயுர்வேத கலாசாலை :

சென்னைசர்க்கார் சித்த ஆயுர்வேத யூனானி வைத்யங்களில் டிகிரி படிப்பிற்கான கலாசாலை ஒன்றை தற்போது பூந்தமல்லிப் பெருவழியிலுள்ள எம்ப்ளாயிஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் வரும் ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்க விருப்பதாகத் தெரி

கிறது. B. I. M. டிகிரி படிப்பிற்கான 5 வருடப் பயிற்சி யளிக்கப் படும். ஸித்தவைத்தியத்திற்கு 40 மாணவர்களும் ஆயுர்வேதத்தில் 20 மாணவர்களும் யூனனிக்கு 10 மாணவர்களும் சேர்த்துக் கொள் ளப் படுவார்கள். மாணவர்கள் இம்முறைகளைப் படிக்க ஊக்கம் தரும் வகையில் ஸ்டைபெண்டுகளும் கொடுக்கப்படும்.

* * *

# திருச்சி ஆயுர்வேத ஸபை

ஸபையின் மாதாந்தர தத்வித்யஸம்பாஷா பரிஷத் கூட்டம் சென்ற 30—9—61 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருச்சி ஆயுர் வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. கரூர் ஸ்ரீ P. S. ராம சர்மா அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி அவர்கள் சோதம் என்பதுபற்றி உபன்யஸித்தார் கள். அங்கத்தினர்களின் சர்ச்சையுடன் கூட்டம் முடிவுற்றது.

* * *

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்.

நிர்வாஹ ஸமிதிக்கூட்டம் சென்ற 30—9—61 சனிக்கிழமை மாலை 2 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் கரூர் பண்டிட் ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அடுத்த மகாநாட்டை கோயம்புத்தூரிலோ மதுரையிலோ நடத்த ஏற்பாடு செய்யவும். அகிலபாரத ஆயுர்வேத மஹாஸம்மேளன கார்ய காரிணீஸமிதிக்கு ஸ்ரீ T. S. ஈச்வர அய்யர் L. I. M. அவர்களை யும் அகிலபாரத ஆயுர்வேத வித்யாபீட பிரபந்தக ஸமிதிக்கு கரூர் வைத்யவாசஸ்பதி பண்டிட் ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்களையும் தமிழ் நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் சார்பில் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுத்து அகிலபாரத ஆயுர்வேத ஸம்மேளன காரியாலயத் திற்குத் தெரிவிக்கவும். ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கான தனிப் பட்ட சட்டதிட்டங்கள் வரும்வரை தற்போதுள்ள அலோபதி டிரக் கண்ட்ரோல் ஆக்டின்கீழ் ஆயுர்வேத மருந்து உற்பத்தியைக் கொண்டுவந்து கட்டுப்படுத்தாதிருக்குமாறு மத்யசர்க்காரின் ஆயுர் வேத ஆலோசகருக்கு கோரிக்கை விடுத்தும் தீர்மானங்கள் நிறை வேறின.

# பொருக்குமணிகள் :

क्वचिदर्थः क्वचिन्मैत्री क्वचिद्धर्मः क्वचिद्यशः ।

कर्माभ्यासः क्वचिच्चैव चिकित्सा नास्ति निष्फला ॥

சிகித்ஸை எனும் காரியத்தில் ஏதேனும் ஒரு நல்ல பலன் உண்டு. இது எப்போதும் வீண் போவதில்லை. சிலவிடத்தில் பணம் கிடைக்கும். சில விடத்தில் நட்பு. சிலவிடத்தில் தர்ம லாபம், சிலவிடத்தில் பெரும் புகழ், மற்றும் சிலவிடத்தில் தொழிற் பழக்கம். ஆக எல்லாம் பயனுள்ளவையே.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

निरामदोषस्य हि भेषजानि

भवन्ति युक्तान्यमृतोपमानि ।

ஜீர்ணசக்தி ஒழுங்காக இருப்பவனுக்கு மருந்துகள் கொடுக்க அமிருதம்போல் ஒத்துக்கொள்ளும். (யோகசதகம்)

मुक्ताफलेषु छायायास्तरलत्वमिवान्तरा ।

अन्तरा यदिहाभाति तल्लावण्यमुदीर्यते ।

முத்துக்குவியலில் அதன் மென்மையான ஒளியின் பிரதி பலிப்பு காரணமாக நடுநடுவே காணும் நீரோட்டம் போல உடலில் மென்மையழகு புலப்படுவதை லாவண்யம் என்பர்.

अस्ति ननु ... ... ग्लानिरप्रभावत्त्वं वैस्वर्यं वैवर्ण्यं च ग्राम्यवास-कृतमसुखानुबन्धं च । ग्राम्यो हि वासो मूलमशस्तानाम् ।

கிராமிய வாழ்க்கை (ஆரோக்யவாழ்விற்கு வகையறியாது மூடப்போக்கில் வாழ்வது) களைப்பு, களையிழத்தல், குரல் இனிமை மாறுதல், நிறம் குன்றுதல் போன்ற கஷ்டங்களை உடனுக்குடனும் தொடர்ந்தும் கொடுக்கக்கூடியது. அவ்விதம் வாழ்வது சீர்கேட்டிற்குக் காரணமாகும். (சரகஸம்ஹிதை.)

न हि सम्यगुद्धृतेषु सौम्यभैषज्येषु. सम्यग्विहितेषु सम्यगवचारितेषु जनपदोध्वंसकराणां किञ्चित्प्रतीकारगौरवं भवति ।

நல்லவேளையில் நல்லவிடத்தில் விளைந்ததும் அதன் ரஸ வீர்யவிபாகங்கள் முதலியவை நிரம்பியிருக்கும் சமயத்தில் சேகரிக்கப் பட்ட மருந்துப் பொருள்களைக்கொண்டு முறைப்படி தயாரித்த மருந்தை வழியுடன் கொடுக்க கொள்ளை நோய்களில் சிகித்ஸை எளிதாக முடியும். (சரகஸம்ஹிதை)

காலாந்தரப் பிராணஹரப் பிரிவைச்சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது.[1] இங்கு அடிபட புப்புஸத்தில் கபம் நிறைந்து காஸச்வாஸங்களில் மரண பரியந்தமான கெடுதி ஏற்படும்.

இந்த மர்ம அமைப்பில் பல உருப்புகள் அடங்கியுள்ளன.

விலாவெலும்புகளின் நடுத்தசைகள்.[2]

புப்புஸத்தின் முக்கியப் பகுதி — ச்வாஸ நாடி.[3]

மூச்சுவிட உதவும் நரம்பு.[4]

பிராணத நாடி.[5]

ஹிருதயத்திலிருந்து புப்புஸம் செல்லும் பெரு ரத்தக் குழாய்.[6]

ஹிருதயத்திலிருந்து வெளியாகும் மஹாதமனி இறங்கும் பகுதி.[7]

புப்புஸ ரத்தக்குழாய்கள், ரஸாயனிகள், ரஸக்ரந்திகள்.[8]

புப்புஸ நரம்புகள்.[9]

4. **அபலாப மர்மம் :—** இரு தோள்வளைகளுக்கும் கீழே கக்கத்தின் பக்கத்தில் மார்பகத்தின் வெளிப்புறத்தில் இவை உள்ளன. ஸிராமர்மங்கள் காலாந்தரப்ராணஹரப் பிரிவினைச் சேர்ந்தவை. இங்கு அடிபட ரக்தம் கசிந்து சீழாகி பிராண

---

1. स्तनचूचुकयोरूर्ध्वं द्व्यंगुलमुभयतः स्तनरोहितौ नाम। तत्र लोहित पूर्णकोष्ठतया कासश्वासाभ्यां म्रियते।

2. Inter-costal Muscle.

3. Bronchus.

4. Phrenic Nerve.

5. Vagus nerve Posterior.


6. Superior Vena Cava.

7. Descending Aorta

8. Pulmonary, Artery, Vein, Lymphatic Vessels, lymph glands.

9. Pulmonary-Plexus.

நாசம் வரையுள்ள உபத்திரவங்கள் ஏற்படும். அரை அங்குலப் பருமனுள்ளது.[1]



1. அபலாபம்
2. அபஸ்தம்பம்
3. ஸ்தநரோஹிதம்
4. ஹிருதயம்
5. ஸ்தநமூலம்
6. குகந்தரம்
7. பஸ்தி
8. நாபி

இதன் அமைப்பில் பங்குகொள்பவையாவன :—

மேற்கைக்கு வரும் நரம்புகள்[2]

கக்கத்திற்குச் செல்லும் ரத்தக்குழாய்கள், ரஸாயனிகள்[3]

தோளவளையும் மூடும் தசைக்குச்செல்லும் ரத்தக்குழாய்கள்[4]

5. **அபஸ்தம்பமர்மம்**

மார்பின் இருபுறங்களிலுமுள்ள இருநாடிகள். ஸிராமர்மம். காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப்

---

1. अंसकूटयोरधस्तात्पार्श्वोपरिभागयोरपलपौ नाम। तत्र रक्तेन पूयभावं गतेन मरणम्।
2. Brachial Plexus.
3. Axillary Artery, Vein & Lymphatic Vessels.
4. Thoraco Acromial Artery.

பருமனுள்ளது. இங்கு அடிபட மார்பகத்தில் காற்று நிரம்பி காஸ ச்வாஸங்கள் ஏற்பட்டு மரணம்வரை உபத்திரவங்கள் உண்டாகும்.[1]

இதன் அமைப்பில் பங்குகொள்பவை:—

ச்வாஸ நாடிகள்[2]
பிரச்வாஸ நரம்புகள்[3]
பிராணதா நரம்புகள்[4]
மஹாமாத்ருகா தமனி[5]
அக்ஷதராசிரா[6]

மார்பகத்தின் இருபக்கங்களிலுமுள்ள இந்த மர்மங்களுக்கு ச்வாஸாசயச்செயலில் பூர்ணமான பங்கு உண்டு. ச்வாஸா சயத்தில் அடிபட்டு பிராணவாயு ஸ்தம்பிப்பதால் காஸ ச்வாஸங்கள் ஏற்பட்டோ, தமனி சிரைகளில் அடிபட்டு ரத்தம் நிரம்பி காஸச்வாஸங்கள் ஏற்பட்டோ இங்கு மரணம் ஏற்படும்.[7]

---


1. उभयत्रोरसो नाड्यौ वातवहौ अपस्तंभौ नाम। तत्र वातपूर्ण-कोष्ठतया कासश्वासाभ्यां मरणम्। (ஸுச்ருதம்.)

शोणित पूर्णकोष्ठतया कासश्वासाभ्यां मरणम्। (வாக்படர்)

2. Bronchus.
3. Phrenic nerve.
4. Vagus nerve.
5 Common carotid ar.ery.
6. Sub clavian vein.

7. மார்பகத்திலுள்ள மர்மங்களில் 'ஹ்ருதய மர்ம'த்தைத் தவிர ஸ்தனரோஹிதம், ஸ்தனமூலம், அபலாபம், அபஸ்தம்பம் ஆகிய மர்மங்கள் அனைத்தும் புப்புஸத்துடன ஸம்பந்தப்பட்டவையே. ஸ்தன மூலத்தில் அடியால் புப்புஸத்தில் கபம நிரம்பியும், ஸ்தனரோஹிதத்தில் அடியால் ரக்தம் நிரம்பியும, அபலாபத்தில் அடியால் ரக்தம் சீழாக மாறியும, அபஸ்தம்பத்தில் அடியால் வாயு (ரக்தம்) நிரம்பியும் மரணம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. அபஸ்தம்பங்களை சுவாஸகோசம் எனக் கூறுவது உண்டு. ச்வாஸகோசத்தில் பிராணவாயு ஸ்தம்பமோ, புப்புஸாவரண கலையில் வாயு நிரம்பியோ (Penumo thorax) கபம் நிரம்பியோ (Pneumonia முதலியவை) ரக்தம் நிரம்பியோ (Haemo thorax –

ஆக குதம், பஸ்தி, நாபி, ஹிருதயம், ஸ்தனமூலங்கள் இரண்டு, ஸ்தநரோஹிதங்கள் இரண்டு, அபலாபங்கள் இரண்டு, அபஸ்தம்பங்கள் இரண்டு என பன்னிரண்டு மர்மங்கள் வயிறு — மார்பு பக்கங்களில் உள்ளவையாகும்.




குதமர்மம்

**பிருஷ்ட மர்மங்கள்.**

1. கடீகதருணம் :— முதுகுத்தண்டெலும்பின் இருபுறங்களிலும் இடுப்பெலும்பில் உள்ளவை. அஸ்திமர்மம், காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன் உள்ளது. இங்கு

1. கடீகதருணம்
2. நிதம்பம்
3. பிருஹதீ
4. அம்ஸபலகம்
5. அம்ஸம்




அடிபட்ட மனிதனுக்கு ரக்த க்ஷயத்தால் பாண்டு, நிறம் மங்குதல், உடல் இளைப்பு முதலியவை ஏற்பட்டு மரணம் ஏற்படும்.[1]

Haemoptysis) சீழ் கிரம்பிசேயா (Empyema) ஏற்படும் நோய் நிலைகள் புப்புஸத்தின் மேல் ஏற்படும் அடியால் ஏற்படுபவை.

1. तत्र पृष्ठवंशमुभयतः प्रतिश्रोणिकाण्डमस्थिनी कटीकतरुणे नाम मर्मणी। तत्र शोणितक्षयात् पाण्डुर्विवर्णो हीनरूपश्च म्रियते।

இடுப்பெலும்பின் (ஜகனகபாலம்) பின்புறத்து ஏற்றமுள்ள பகுதி,[1] அங்கு வரும் ரத்தக்குழாய்கள்,[2] திரிகாஸ்தியையும் ஜகனகபாலத்தையும் இணைக்கும் கட்டு நார்கள்.[3] இவை இந்த முக்கியமாக உள்ள அவயவங்கள்.

2. குகுந்தரம் :— இடுப்பெலும்பும் திரிகாஸ்தியும் சேரும் இடத்தில் வெளிப்புறத்தில் உள்ள சிறிது பள்ளமான பாகம் ஸந்திமர்மமாகும். வைகல்யகரப் பிரிவைச் சார்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட இடுப்பிற்குக் கீழுள்ள பாகத்தில் செயல் குன்றி உணர்வு மறந்துவிடும்.[4]

இதன் அமைப்பில் கிருத்ரஸீ[5] நரம்பு திரிகநாடீ சக்கிரத்தி லிருந்தும் கிளம்பி இடுப்பு குஹைக்குள் புகுமிடம். கிருத்ரஸீ நரம்பு, திரிக நரம்புகள் அடிபடும்போது இடுப்புக் கீழ் இயக்கம் தடைபடுவதும் உணர்விழப்பதும் ஏற்படுகின்றது.

3. நிதம்பமர்மம் :— இடுப்பெலும்பின் இருபுறங்களிலும் விலாப்புறத்தில் ஏற்றமுள்ள பகுதியும் இடுப்பு — உதர குஹையில் அடங்கியுள்ள ஆசயங்களுக்குப் பாதுகாப்பளிப்பது மான அஸ்திமர்மம். காலாந்தர ப்ராண ஹரப் பிரிவைச் சேர்ந்தது; அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட இடுப்பு உதரகுஹைகளின் நரம்புகள் அடிபட்டு இடுப்புக்குக் கீழ் உள்ள அங்கங்கள் சூம்பி துர்பலம் ஏற்பட்டு மரணம் ஏற்படும்.[6]

4. பார்ச்வஸந்திமர்மம் :— இடுப்பிற்கும் விலாப்புறத்திற்குமிடையே இருபுறங்களிலும் குறுக்கிலும் மேலும் கீழுமாகவும் உள்ள பகுதி. ஸிராமர்மமாகும். காலாந்தர

1. Ilium – posterior aspect.
2. Common iliac artery & vein.
3. Sacro iliac ligament.
4. पार्श्वजघनबहिर्भागे पृष्ठवंशमुभयतो नातिनिम्ने कुकुन्दरे नाम मर्मणि, तत्र स्पर्शज्ञानमधःकाये चेष्टोपघातश्च ।
5. Sciatic nerve.
6. श्रोणिकाण्डयोरुपर्याशयाच्छादकौ पार्श्वान्तरप्रतिबद्धौ नितंबौ नाम, तत्राधःकायशोषो दौर्बल्याच्च मरणम् ।

ப்ராணஹரமர்மமாகும். அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட விலாப்புறங்களிலே குடலிலும் ரத்தக்கசிவு மிகுந்து புடைத்து மரணம் ஏற்படும்.[1]

விலாவின் இருமருங்கிலும் கீழே உள்ள தொங்கும் விலா வெலும்புப் பகுதிகளும் விருக்கத்திலிருந்து வரும் ரத்தக்குழாய்களும் இதன் அமைப்பில் அடங்குகின்றன.

5. **பிருஹதீமர்மம்** :— ஸ்தநமூல மர்மத்தின் நேர் பின்புறத்தில் முதுகுத்தண்டி (ப்ருஷ்டவம்சம்)ன் இருபுறங்களிலும் உள்ள ஸிராமர்மம். காலாந்தர ப்ராணஹரம். அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கும் ரக்தக்குழாய்கள் அடிபட்டு ரக்தம் மிகுந்த அளவில் சேதமாகி மரணம் ஏற்படுகின்றது.[2]

இதன் அமைப்பில் பங்கு கொள்பவை :—

வலப்புறத்தில் யகிருத்தின் ரக்தக்குழாய்கள்[3]

இடப்புறத்தில் ப்லீஹத்தின் ரக்தக்குழாய்கள்[4]

6. **அம்ஸபலகமர்மம்** :— முதுகின் மேல்புறத்தில் பிருஷ்டவம்சத்தையொட்டி திரிகத்தில் சேரும் தோள்பட்டை எலும்புகளாகிற அஸ்திமர்மம். வைகல்யகரப் பிரிவில் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது இங்கு அடிபட கைகள் மரத்துச் சூம்பிப்போகும்.[5]

இதன் அமைப்பில் பங்குகொள்பவை :—

அம்ஸபலகம் — தோள்பட்டை[6]

---

1. अधः पार्श्वान्तर प्रतिबद्धौ जघनपार्श्वमध्ययोस्तिर्यगूर्ध्वं च जघनात् पार्श्वसन्धिर्नाम । तत्र लोहितपूर्णकोष्ठतया म्रियते ।

2. स्तनमूलादृजूभयतः पृष्ठवंशस्य बृहत्यौ नाम । तत्र शोणितातिप्रवृत्तिनिमित्तैरुपद्रवैः म्रियते ।

3. The Vessels at the hilum of liver.

4. The Vessels at the hilum of spleen.

5. पृष्ठवंशमुभयतस्त्रिकसंबद्धे अंसफलके नाम । तत्र बाह्वोः स्वापशोषौ ।

6. Scapula.

தோள்பட்டையிலுள்ள தசைகளை இயக்கும் நரம்புகள்.

தோள்பட்டை — தசைகளுக்கு புஷ்டிதரும் ரத்தக் குழாய்கள்.

7. அம்ஸமர்மம்:— கை, கழுத்து இவைகளைப் பிணைத்துள்ள தோள் பிரதேசத்தின் கட்டு நார் பகுதி. ஸ்நாயுமர்மமாகும். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலகனமுள்ளது. இங்கு அடிபட கைகள் ஸ்தம்பித்து இயங்க முடியாமல்போகும்.[1]

இதில் பங்கு கொள்பவை:—

தோள்பட்டை எலும்பின் காக்கை மூக்குப் பகுதியையும் தோள் எலும்பையும் தோள்பட்டையையும் பிணைக்கும் கட்டு நார்கள்.[2]

அசைவு மிகுதியுள்ள பகுதியான தோள் பகுதியில் தோள் பூட்டைக் காப்பாற்றும் கட்டுநார்கள் அடிபட்டு பலமிழப்பதால் கைகள் செயலிழப்பது இங்கு ஏற்படும் கெடுதியாகும்.

ஆக கடீக தருணங்கள் இரண்டு, குகுந்தரங்கள் இரண்டு, நிதம்பங்கள் இரண்டு, பார்ச்வஸந்திகள் இரண்டு, பிருஹதீ இரண்டு, அம்ஸபலகங்கள் இரண்டு, அம்ஸங்கள் இரண்டு என பதினான்கு பிருஷ்டமர்மங்களாகும். இவ்விதம் மத்ய சரீரத்தில் 26 மர்மங்கள் உள்ளன.

### கழுத்திலுள்ள மர்மங்கள்

நீலா — மந்யா:— தொண்டைக் குழாயின் இருபக்கங்களிலும் தாடையின் அடிப்பக்கத்தில் பக்கத்திற்கு ஒன்றாக நீலா என்று இரு தமனிகளும் மந்யா என்று இரு தமனிகளும் உள்ளன. இவை ஸிராமர்மங்கள்.[3] வைகல்யகரப் பிரிவினைச்

---

1, बाहुमूर्धग्रीवामध्ये अंसपीठस्कन्धनिबन्धनावंसौ नाम, तत्र स्तब्धबाहुता।

2 Ligaments - coraco clavicular, conoid, trepezoid, superior Acromeco - clavicular, coraco acrominal.

3. ஸிராமர்மப்பிரிவைச் சேர்ந்ததாயினும் இவைகளில் ரக்தக்குழாய்கள் மட்டும் முக்கியத்துவம் கொண்டதாக நினைக்க முடியவில்லை. ஸுச்ருதர் இவைகளை தமனிகள் எனக்குறிப்பிடு

சார்ந்தவை. நீளம் நான்கு அங்குலங்கள். ஊமை, தொண்டைக்குரல் மாறுதல், மணம் உணராமை முதலியவை இதில் அடிபடுவதால் ஏற்படுகின்றன.[1]

இவைகளின் அமைப்பில் பங்குகொள்பவை :

மஹாமாத்ருகா எனும் சுத்தரக்தக்குழாய்கள்[2]

அனுமன்யா எனும் அசுத்த ரத்தக்குழாய்கள்[3]

ஸ்வரயந்திரத்திற்குச் செல்லும் நரம்பு[4]

தொண்டை நாக்கிற்குச் செல்லும் நரம்பு[5]

நாக்கின் அடியில் செல்லும் நரம்பு[6]

நாக்கின் அடியில் செல்லும் ரக்தக்குழாய்கள்[7]


---

வதில் விசேஷ தாத்பர்யமுண்டு. ஸுச்ருதரின் பரிபாஷைப்படி தமனிகள் ஸம்ஜ்ஞா சேஷ்டாவாஹிகளான நரம்புகளாகும். ரக்தக்குழாய்களல்ல. ஸுச்ருதரின் பிரிவுப்படி இவை ஸிரா மர்மங்களாயினும் இவை அடிபடுவதால் ஏற்படும் ஊமைத் தன்மை முதலியவை சேஷ்டாநாசத்தையே குறிப்பிடுவதால் ரக்தக்ஷயம் போன்ற ஸிராவ்யத லக்ஷணங்கள் காணுததாலும் அமைப்பில் ஸிரைகளின் முக்கியத்துவமும் ஸ்தான பலத்தால் தமனிகளின் முக்கியத்துவமும் இங்கு உணரப்பட வேண்டுமென் பதையே ஸுச்ருதரின் தமனி என்ற சொல் குறிப்பிடுகின்றதா கக் கொள்ள இடமிருக்கிறது. வாக்படர் ஸிரைகள் என்றே குறிப்பிடுவது அமைப்பைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

1. तत्र कण्ठनाडीमुभयतश्चतस्रो धमन्यो द्वे नीले द्वे मन्ये व्यत्यासेन । तत्र मूकता स्वरवैकृतं अरसग्राहिता च । (ஸுச்ருதர்)

कण्ठनाडीमुभयतः सिरा हनुसमाश्रिताः ।
चतस्रस्तासु नीले द्वे मन्ये द्वे मर्मणी स्मृते ॥ (வாக்படர்)

2. Carotid artery.
3. Jugular vein.
4. Superior glossal nerve.
5. Glasso pharyngeal nerve.
6. Hypoglossal nerve.
7. Sub lingual Blood vessels.




மேல் இடது— 1. மாத்ருகா 2. நீலா-மந்யா 3. பணம் 4. சங்கம் 5. ஆவர்தம் 6. உத்க்ஷேபம் 7. சிருங்காடகம் (தலையின் பின்புறத்திலும் உத்க்ஷேபத்தின் கீழும் உள்ள வளையங்கள்) 8. விதுரம்.

மேல் வலது 1. பணம் 2. அபாங்கம் 3 ஸ்தபநீ. 4. உத்க்ஷேபம். கீழ் இடது- 1. அதிபதி 2. கிருகாடிகா. கீழ் வலது- 1. ஸீமந்தம்.

**மாத்ருகா மர்மம்**

இவை கழுத்தின் இருபுறங்களிலுமுள்ள பக்கத்திற்கு நான்காக எட்டு ஸிரைகளாகும். ஸத்யஃபிராணஹர ம்ர்மங்கள். நான்கு அங்குல நீளமுள்ளவை. இங்கு அடிபட ரக்தக்குழாய்கள் அறுந்து உடன் மரணம் ஏற்படும்.[1]

இதன் அமைப்பில் மஹாமாத்ருகாவும் அனுமன்யாஸிரையும் மற்றுமுள்ள கழுத்துப்புறத்திலுள்ள முகத்திற்குச் செல்பவையும் அங்கிருந்து திரும்புபவையுமான ரக்தக் குழாய்கள் இடம் பெறுகின்றன.[2]

**கிருகாடிகா மர்மம்:** தலையும் கழுத்தும் சேருமிடம் கிருகாடிகா எனும் இரு மர்மங்கள் உள்ளன. ஸந்தி மர்மமாகும். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட தலையாட்டம் ஏற்படும்.[3]

இதன் அமைப்பில் முதுகுத்தண்டின் மேல் உள்ள முதலிரண்டு வளைய எலும்புகளும் தலையின் அடிபாகமும் சேருமிடம் பங்கு கொள்கின்றன.

முதுகுத்தண்டின்மேல் முதல் இரண்டு எலும்புகளும் இரண்டாவது எலும்பின் முள்போன்று நீட்டிக்கொண்டிருக்

---

1. ग्रीवामुभयतश्चतस्रश्चतस्रः सिरामातृकाः । तत्र सद्यो मरणम् ।

कण्ठनाडीमुभयतो जिह्वानासागताः सिराः ।

(ஸுச்ருதர்)

पृथक्चतस्रः ताः सद्यो घ्नन्त्यसून्मातृकाह्वयाः ॥ (வாக்படர்)

2. நீலா-மந்யா-மாத்ருகா இந்த மர்மங்களின் பங்கு கொள்ளும் அங்கங்களின் நிர்ணயத்தில் மூலக்ரந்தங்களிலும் விவரணகாரர்களின் குறிப்புகளிலும் மதபேதம் உண்டு. இவைகள் ஸ்தானமான மந்யா (மென்னி) பிரதேசம் மிகவும் ஜாக்ரதையாகக் காப்பாற்றவேண்டிய மர்மஸ்தானம் என்பதுதான் கவனிக்கத்தக்கது. நீலா-மந்யா இவ்விரண்டும் மென்னியிலுள்ள நரம்புகளையும் மாத்ருகா ஸிரைகளையும் குறிப்பிடுவதாகக் கொள்ளுதல் நல்லது.

3. शिरोग्रीवयोः सन्धाने कृकाटिके नाम । तत्र चलमूर्धता ।

கும் பாகத்தால் சேர்ந்திருப்பது இவைகளுக்கு முக்கியத்துவமளிப்பதாகும்.[1]

ஆக மந்யா இரண்டு, நீலா இரண்டு, மாத்ருகா எட்டு, கிருகாடிகா 2 என கழுத்திலுள்ள மர்மங்கள் பதினான்கு.

### தலையிலுள்ள மர்மங்கள்

**விதுர மர்மம்:** காதுகளின் கீழே பள்ளத்தில் உள்ள ஸ்நாயு மர்மம். வைகல்யகர மர்மப்பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குல அளவுள்ளது. இங்கு அடிபட செவிடு ஏற்படும்.[2] வலது-இடது புறங்களில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு மர்மங்கள்.



விதுரம்.

இதன் அமைப்பில் பங்கு கொள்பவை:

காதின் பின் புறத்தில் வந்து சேரும் ரத்தக் குழாய்கள்.[3]

காதின் படுதா[4]

உள்காதின் அமைப்பிலுள்ளவை[5]

8வது தலை நரம்பின் கிளைகள்[6]

### பண மர்மம்.

மூக்குவழிக்கு இரு புறங்களிலும் உள்பக்கத்தில் துவாரங்களை யொட்டியுள்ள இரு ஸிரா மர்மங்கள் வைகல்யகரப்பிரி

---

1. Articulation between occipital bone & atlas, and between atlas and Axis.


2. कर्णपृष्ठतोऽधः संश्रिते विधुरे नाम । तत्र बाधिर्यम् । (ஸுச்ருதர்)

வாக்படரின் மதப்படி இது தமனீ மர்மமாகும்.

अधस्तात्कर्णयोर्निम्ने विधुरे श्रुतिहारिणी ।

3. Poserior auricular vessels.
4. Tympanum.
5. Structure in the middle ear.
6. Branches of the 8th Cranial nerve.

வினைச் சேர்ந்தவை. அரை அங்குலப்பருமன் உள்ளது. இங்கு அடிபட மூக்கின் மண உணர்வு போய்விடும்.[1]




பணம்.


இதன் அமைப்பில் மூக்கு தொண்டை காது இவைகளை ஒன்றோடொன்று பிணைக்கும் குழாய்[2] மணஉணர்ச்சி உண்டாக்கும் கந்தநாடி[3] காதின் சுரங்கவழி[4] மூக்கின் குலை[5] இவையெல்லாம் அடங்கும்.

### அபாங்க மர்மம்

புருவத்தின் வெளியோரத்தின் கீழே கண்களுக்கு வெளியே கடைக்கண் பிரதேசத்திலுள்ள ஸிரா மர்மம்.[6] வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. ½ அங்குல அளவுள்ளது. இங்கு அடிபட குருடு, பார்வை மங்குதல் ஏற்படும்.[7]

இதன் அமைப்பில் பங்குகொள்பவை :

1. கன்னம் பொட்டு இவைகளில் ஓடும் ரத்தக் குழாய்கள்[8]
2. கண் நரம்புக் கிளைகள்[9]
3. கண்ணீர் கோள நரம்புக் கிளைகள்[10]
4. கண்புறத்து நரம்பு[11]



அபாங்கமும் ஆவர்த்தமும்

---

1. घ्राणमार्गमुभयतोऽभ्यन्तरतः स्रोतोमार्गप्रतिबद्धे फणे नाम। तत्र गन्धाज्ञानम् । (ஸுச்ருதர்)

फणावुभयतो घ्राणमार्गं श्रोत्रपथानुगौ ।
अन्तर्गलस्थितौ वेधात् गन्धविज्ञानहारिणौ । (வாக்படர்)

2. Eustachian Tube. 3. Olefactory nerve. 4. Orifice of auditory tube. 5. Olfactory region of the nasal cavity.

6. வாக்படர் மதப்படி ஸ்நாயுமர்மம்.

7. भ्रूपुच्छान्तयोरधः अक्ष्णोर्बाह्यतः अपांगौ तत्रान्ध्यं दृष्ट्युपघातो वा ।

8. Zygomatic & Temporal vessels. 9. Branches of Optic nerve. 10. Lachrymal nerve. 11. Abducens, 6th cranial nerve.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் "(பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சிராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனு பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS,**

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்ப்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.